முதல் முறையாக ஹஜ் பயணம் மேற்கொள்ளும்

5,650 பயனாளிகளுக்கு தலா ரூ.25,000/-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, மே.11-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.5.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ் நாடு மாநில ஹஜ் குழு மூலம் முதல் முறையாக ஹஜ் பயணம் மேற்கொள்பவர்களுக்கு ஹஜ் மானியமாக 5,650 பயனாளிகளுக்கு தலா ரூ.25,000/ வீதம் மானியத் தொகை வழங்கிடும் அடையாளமாக, 10 பயனாளிகளுக்கு ஹஜ் மானியத் தொகைக்கான காசோலைகளை வழங்கினார்.

2024-25ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், முதலமைச்சர் அவர்களின் அறிவுரைக் கிணங்க, முதல் முறையாக ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளும் தகுதி வாய்ந்த ஹஜ் பயணிகள் ஒவ்வொருவருக்கும் ஹஜ் மானியத் தொகை இந்த ஆண்டு முதல் 25,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, இந்த ஆண்டு தமிழ்நாடு அரசால்,

14 கோடியே 12 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தகுதியுள்ள பயணி ஒருவருக்கு ரூ.25,000/வீதம் 5,650 பயனாளிகளுக்கு இம்மானியத் தொகை வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்தும் விதமாக, 10 பயனாளிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று தலா ரூ.25,000/க்கான காசோலைகளை ஹஜ் மானியத் தொகையாக வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான ப.அப்துல் சமது, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் முனைவர். சா.விஜயராஜ் குமார், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மிகவிரைவில் சென்னையில் ரூ.25 கோடி செலவில்

முழு உடல் பரிசோதனை செய்யக் கூடிய மருத்துவ முகாமை முதல்வர் தொடங்கி வைக்கிறார்!

சைதாப்பேட்டையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!

சென்னை, மே.11-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மிக விரைவில் சென்னையில் ரூ.25 கோடி செலவில் முழு உடற் பரிசோதனை செய்யக் கூடிய மருத்துவ முகாமினை தொடங்கி வைக்க உள்ளார்கள் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சைதாப்பேட்டையில் முன்னோட்டமாக நடைபெற்ற மருத்துவ முகாமில் தெரிவித்தார்.

மக்களுக்கு உயர் மருத்துவ சேவைகள் மற்றும் ஆரோக்கியமான வாழ்வினை உறுதி செய்யும் வகையில், சட்டமன்ற மானியக் கோரிக்கை 2025 26ஆம் ஆண்டு அறிவிப்பின் கீழ், 1256 இடங்களில் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என்கின்ற அறிவிப்பினைத் தொடர்ந்து, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (10.05.2025) சைதாப்பேட்டை, மாந்தோப்பு, சென்னை பெண்கள் மேல் நிலைப்பள்ளியில் முன்னோட்டமாக நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமினை ஆய்வு மேற்கொண்டார்கள்.

பிறகு அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது :

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது 1999 ஆம் ஆண்டு வருமுன் காப்போம் என்கின்ற ஒரு பெரிய மருத்துவ முகாம் திட்டம் ஒன்று தொடங்கி வைக்கப்பட்டது. 1999 தொடங்கி 2001 வரையில் 2 ஆண்டுகள் மிகச் சிறப்பாக இந்த மருத்துவ முகாம்கள் தமிழ்நாடு முழுவதிலும் நடத்தப்பட்டது. பிறகு 10 ஆண்டு காலம் மருத்துவ முகாம்கள் நடைபெறாமல் போனது. தொடர்ந்து 2006 முதல் 2011 வரை மீண்டும் அந்த வருமுன் காப்போம் என்கின்ற மருத்துவ முகாம்கள் நடைபெற தொடங்கியது. அதற்கு பிறகு 2011ல் இருந்து 2021 வரை ஏறத்தாழ 10 ஆண்டுகள் அந்த வருமுன் காப்போம் என்கின்ற முகாம்கள் தமிழ்நாட்டில் நடைமுறையில் இல்லாமல் போனது. அந்த வகையில் 2021 மே திங்கள் 07 ஆம் தேதி வணக்கத்திற்குரிய முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுடைய இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு வருமுன் காப்போம் என்பது கலைஞரின் வருமுன் காப்போம் என்கின்ற பெயர் மாற்றத்தோடு நடைமுறைப்படுத்தப்பட தொடங்கியது. அந்தவகையில் தமிழ்நாட்டில் இருக்கிற ஒவ்வொரு ஒன்றியத்திலும், ஆண்டொன்றிற்கு 3 முகாம்கள், அன்றைக்கு தமிழ்நாட்டில் இருந்த மாநகராட்சிகளின் எண்ணிக்கை 21. ஒவ்வொரு மாநகராட்சிக்கும் 4 முகாம்கள் வீதம் சென்னையைப் பொருத்த வரை 15 மண்டலங்கள் என்கின்ற வகையில் 15 முகாம்கள் என்று சொல்லப்பட்டு, 1250 முகாம்கள் ஆண்டோன்றிற்கு நடத்தப்படுவது என்று முடிவு எடுக்கப்பட்டு சட்டமன்றத்தில் அந்த செய்தி நிதிநிலை அறிக்கையில் இடம்பெற்றது. அந்த வகையில் 2021 செப்டம்பர் திங்கள் 09 ஆம் தேதி சேலம் மாவட்டம், வாழப்பாடி பகுதியில் இருக்கின்ற அரசு மருத்துவமனையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கலைஞரின் வருமுன் காப்போம் என்கின்ற திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். ஆண்டு தோறும் இந்த முகாம்கள் மிகச் சிறப்பாக நடைபெற்று சாதனை படைத்து வருகிறது. இது வரை நடைபெற்றுள்ள முகாம்களின் எண்ணிக்கை 5654 முகாம்கள் கடந்த 4 ஆண்டுகளில் தமிழ்நாடு முழுவதும் நடைபெற்றுள்ளது. இதன் மூலம் பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை 52,87,000 பேர்.

சிறப்பு திட்டங்கள்

மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மைக்காக்கும் 48, பாதம் பாதுகாப்போம் திட்டம், இதயம் காப்போம், சிறுநீரக பாதுகாப்பு திட்டம், நடப்போம் நலம் பெறுவோம், மக்களைத் தேடி மருத்துவ ஆய்வக திட்டம், தொழிலாளர்களை தேடி மருத்துவம் திட்டம் என்று பல்வேறு திட்டங்கள் தொடர்ந்து நடைமுறையில் இருந்து வருகிறது. முதலமைச்சர் அவர்கள் கலைஞரின் வருமுன் காப்போம் திட்டத்தை மேலும் மெருகேற்றி Master Health Check up தனியார் மருத்துவமனைகளுக்கோ, அரசு மருத்துவமனைகளுக்கோ முழு உடற் பரிசோதனை என்று சென்றால் ரூ.1000/ தொடங்கி ரூ.5000/ வரை செலவாகின்றது. தனியார் மருத்துவமனை என்று எடுத்துக் கொண்டால் ரூ.12,000/ வரை செலவாகின்றது. இந்த Master Health Check up என்பது முழு உடற் பரிசோதனை அனைத்து மக்களும் செய்து கொள்வது பொருளாதார ரீதியாக இயலாதகாரியம். எனவே இதனை கருத்தில் கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒட்டு மொத்த மக்களும் முழு உடற் பரிசோதனை தெரிந்து கொள்வது அவர்களுடைய உடலில் உள்ள நோய் பாதிப்புகளுக்கு தீர்வு காண்பது என்கின்ற வகையில் ஒரு திட்டத்தை நிதிநிலை அறிக்கையில் அறிவித்தார்கள். இந்த திட்டத்திற்கு ஒரு புதிய பெயர் விரைவில் சூட்டப்படவிருக்கிறது. மிகவிரைவில் முதலமைச்சர் அவர்கள் சென்னையில் இருந்து இந்த திட்டத்தை தொடங்கி வைக்க உள்ளார்கள். இந்த திட்டத்தில் 17 வகையான சிறப்பு மருத்துவம்கள், 30 வகையான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவிருக்கிறது. முழு உடற் பரிசோதனைக்கு தேவையான ஒட்டுமொத்த பரிசோதனைகளும் இந்த முகாமில் மேற்கொள்ளப்படவிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் இந்த முகாம்களுக்கு வருபவர்களுக்கு குறிப்பாக மாற்றுத்திறனாளிகளாக இருந்தால் அவர்களுக்கான அடையாள அட்டைகள் இங்கேயே பரிசோதனை செய்து மாற்றுத்திறனாளி அட்டைகள் வழங்கப்படும். அதேபோல் காப்பீட்டு திட்டத்தைப் பொறுத்தரை சென்னை நீங்கலாக, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களில் மட்டுமே புதிய காப்பீட்டு அட்டை வழங்கப்படும். சென்னையைப் பொறுத்த வரை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கேற்ப, இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு, நுங்கம்பாக்கம், சைதாப்பேட்டை போன்ற பல்வேறு பகுதிகளில் புதிதாக காப்பீட்டு திட்ட அட்டைகளை பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக அமைப்புகள் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. எனவே சென்னை போன்ற மக்கள் அதிகமாக வாழும் இடங்களில் வருமுன் காப்போம் முகாம் நடைபெறும் இடத்தில் காப்பீட்டு திட்ட அட்டை இல்லாதவர்களுக்கு புதிய அட்டை உடனடியாக வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும். அதோடு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது வழங்கப்பட்ட காப்பீட்டு அட்டை இன்னமும் நடைமுறையில் இருக்கின்றதா என்கின்ற சந்தேகத்துடன் பலர் அந்த அட்டையினை வைத்திருக்கிறார்கள். எனவே அந்த அட்டைகளை இந்த முகாமிற்கு கொண்டு வந்து அதனை புதுப்பித்துக் கொள்ளலாம். அந்த அட்டைகள் இன்னமும் செயலில் உள்ளதா என்று தெரிந்து கொள்ள இந்த முகாமில் ஏற்பாடு செய்யப்படும். 17 வகையான சிறப்பு மருத்துவத்தோடு இந்திய முறை மருத்துவங்களான சித்தா, ஆயுர்வேதா, ஹோமியோபதி, யுனானி போன்ற மருத்துவமுறைகளும் பயன்பாட்டில் இருந்து வருகிறது. அந்தவகையில் பொது மருத்துவம், இருதய சிகிச்சை, மகப்பேறு மருத்துவம், ஸ்கேன் வசதிகள், அறுவை சிகிச்சைகள், எலும்பு முறிவு, மாற்றுத்திறனாளிகளுக்கான மருத்துவம், காது, மூக்கு, தொண்டை, பல் மருத்துவம், கண் மருத்துவம், சித்த மருத்துவம், மனநல மருத்துவம், ஆய்வக சிகிச்சை, பரிசோதனை மாதிரிகள் சேகரித்தல், காசநோய் கண்டறிதல், மருந்தகம், புறநோயாளிகள் சிகிச்சை, புற்று நோய் பரிசோதனை, குழந்தைகள் நலம் மற்றும் தடுப்பூசி போன்ற அனைத்து திட்டங்களும் இந்த முகாம்களில் நடைமுறைப்படுத்தப்படவிருக்கிறது.

1256 மருத்துவ முகாம்கள்

இந்த திட்டத்தின்படி தமிழ்நாட்டில் இருக்கிற 388 வட்டாரங்களில் ஒரு வட்டாரத்திற்கு 3 முகாம்கள் ஒரு ஆண்டு முழுவதும் நடைபெறவிருக்கிறது. சென்னையைப் பொறுத்த வரை ஏற்கெனவே வருமுன் காப்போம் திட்டத்தை பயன்படுத்துவதைப் போலவே, மண்டலத்திற்கு 1 வீதம் 15 இடங்களில் இந்த முகாம்கள் நடைபெறவிருக்கிறது. தமிழ்நாட்டில் தற்போது 25 மாநகராட்சிகள் இருக்கின்றது. 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 5 மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) ஒரு மாநகராட்சிக்கு 4 என்கின்ற எண்ணிக்கையில் முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது. 10 இலட்சத்திற்கும் குறைவாக உள்ள 19 மாநகராட்சிகளில் 3 என்கின்ற வகையில் 57 மருத்துவ முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது. காலை 09 மணிக்கு தொடங்கி மாலை 04 மணி வரை நடைபெறவிருக்கின்ற இந்த மருத்துவ முகாம்கள் தமிழ்நாட்டில் இந்த மருத்துவ முகாம்கள் 1256 என்கின்ற எண்ணிக்கையில் நடத்தப்படவிருக்கிறது. இந்த முகாம்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மிக விரைவில் சென்னையில் தொடங்கி வைக்கப்படவிருக்கிறார்கள்.

ரூ.25 கோடி செலவில் அனைவருக்கும் முழு உடற் பரிசோதனை திட்டம்

மக்கள் நல்வாழ்வுத்துறையோடு சேர்ந்து உயர்கல்வித் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை போன்ற பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து பள்ளி, கல்லூரிகளில் இந்த முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது. இந்த முகாம்களை நடத்துவதற்கு அரசின் சார்பில் ஒரு முகாமிற்கு ரூ.75,000/ வீதம் பொது சுகாதாரத்துறை தரவிருக்கிறது. அதேபோல் மருந்து பொருட்களை பொறுத்த வரை ஒரு முகாமிற்கு ரூ.33,121/ வரை வழங்கப்படவிருக்கிறது. இதோடு உபகரணங்களுக்கான செலவு என்கின்ற வகையில் தேசிய நலவாழ்வு குழுமம் சார்பிலும் இதற்கு செலவிடப்படவிருக்கிறது. ஆக இந்த 1,256 மருத்துவ முகாமிற்கு ஏறக்குறைய ரூ.25 கோடி வரை செலவிடப்படவிருக்கிறது. மேலும் 1231 தனியார் மருத்துவமனைகளில் காப்பீட்டு திட்டங்கள் நடைமுறையில் இருக்கின்றது. இந்த தனியார் மருத்துவமனைகளும் இந்த முகாம்களில் இணையவிருக்கிறார்கள். அரசு மருத்துவர்களோடு இணைந்து தனியார் மருத்துவர்களும் இந்த முகாமில் இணையவிருக்கிறார்கள் .

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண்தம்புராஜ், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (சுகாதாரம்) டாக்டர். கோ.சாந்தகுமாரி, மாநகர நல அலுவலர் மரு.ஜெகதீசன், மண்டலக்குழுத்தலைவர் கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள் ப.சுப்பிரமணி, தா.மோகன்குமார், திருமதி. ஸ்டெல்லா ஜாஸ்மீன் ரத்னா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சிலந்தி கட்டுரைகள்!

ம.தி.மு.க...“சங்கொலி”யின் மதிப்பீடு!

நம் நினைவில் வாழும் முரசொலி செல்வம் அவர்களின் பிறந்தநாளில் முரசொலியில் ‘சிலந்தி’ என்ற பெயரால் அவர் எழுதிய 151 கட்டுரைகளை தொகுத்து, தி.மு.க. இளைஞர் அணி, முத்தமிழறிஞர் பதிப்பக வெளியீடாக எழில் கொஞ்சும் நூலை வரலாற்று ஆவணமாக வெளியிட்டுள்ளது.

நூலின் உள்ளே, நுழை வாயிலில் இடம்பெற்றுள்ள புன்முறுவல் பூத்த முரசொலி செல்வம் அவர்களின் கம்பீரமான புகைப்படம், அவரை நேரில் பார்க்கும் உணர்வை நமக்கு அளிக்கிறது.

“‘சிலந்தி’ என்ற பெயரால் அவர் எழுதிய கட்டுரைகள் அன்று முதல் இன்று வரை நமக்கு மட்டுமல்ல, அரசியல் ஆர்வலர்கள் அனைவருக்கும் பாடமாக அமைந்தது. பொதுவாக சிலந்தி வலையைத் தொட்டால் அறுத்துவிடலாம்

ஆனால் செல்வம் அண்ணனின் வாதங்கள் நைலான் நரம்பு வலை போலத்தான் இருக்கும்; யாராலும் மறுத்து அறுத்துவிட முடியாது. அந்த அளவிற்கு வலிமையான வாதங்களை வன்மையான எழுத்துக்களால் வைத்து வந்தார்.

அவர் எழுதிய இக்கட்டுரைகள் அவரைப் போலவே கம்பீரமானவை!

ஆறு ஆண்டுகால அரசியல் மட்டுமல்ல, தமிழ்நாட்டின் பல்லாண்டு கால அரசியல் இதனுள் இருக்கிறது. சரியானதை அடையாளம் காட்டுகிறார். தவறானவர்களை அம்பலப் படுத்துகிறார்.

கதை சொல்லும் பாணியில் எழுதி இருப்பதால் இவை படிக்கச் சுவையாகவும் இருக்கின்றன.

அவரதுஎழுத்துக்கள் எப்போதும் சூடானவை அதே நேரத்தில் சுவையானவை. அன்றாட அரசியலைத் தான் விமர்சிப்பார். அதே நேரத்தில் கடந்தகால அரசியலை நினைவூட்டுகிறார். குத்தல் இருக்கும். அதே நேரத்தில் யார் மனதையும் இரணப்படுத்தாது. எல்லோரும் அறிந்து கொள்ள அவரது கட்டுரைகளில் ஏராளமான தகவல்கள் நிறைந்து கிடக்கும்” என்ற தி.மு.க. தலைவரும், தமிழ்நாடு அரசின் முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் அருமையான அணிந்துரை, கரம் பிடித்து நூலின் உள்ளே வாசகர்களை அழைத்துச் செல்கின்றது. அணிந்துரையை அடுத்து, ‘முரசொலி செல்வம் வாழ்க்கைத்தடம்’ என்ற ஏழு பக்கங்கள் கொண்ட கட்டுரை, முரசொலி செல்வம் அவர்களின் வரலாறு, எழுத்தாற்றல், அடக்குமுறையை எதிர்கொண்ட அவருடைய துணிச்சல் ஆகியவைகளை படம் பிடித்துக் காட்டுகிறது.

முரசொலியில் 2019 ஆம் ஆண்டில் எழுதிய 32 கட்டுரைகள், 2020 ஆம் ஆண்டில் எழுதிய 17 கட்டுரைகள், 2021 ஆம் ஆண்டில் எழுதிய 13 கட்டுரைகள், 2022 ஆம் ஆண்டில் எழுதிய 36 கட்டுரைகள், 2023 ஆம் ஆண்டில் எழுதிய 27 கட்டுரைகள், 2024 ஆம் ஆண்டில் எழுதிய 25 கட்டுரைகள் ஆகியவைகள் தொகுக்கப்பட்டு, காலப்பெட்டகமாக, கருத்துக் கருவூலமாக இந்நூல் மின்னி மிளிர்கிறது! ஒவ்வொரு கட்டுரையிலும் இடம்பெற்றுள்ள புகைப்படங்கள் நம்மை கடந்த காலத்திற்கு அழைத்துச் செல்கின்றன. வரலாற்று நிகழ்வுகள் திரைப்படக் காட்சிகளாய், நம் நெஞ்சில் மலர்ந்து மணம் வீசுகின்றன!

“முடியட்டும் மதவெறி! விடியட்டும் நல்லிணக்கம்! ‘புனைச் செய்திகளை பொடிப் பொடியாக்குவோம்!’ ‘நாணலாய் வளைகிறீர்களா? நாணயத்துக்கு வளைகிறீர்களா?’

‘காலத்தை வென்றவன் நீயே!’

‘கொக்கென்று நினைத்தாரோ தமிழக ஆளுநர் ரவி!’ ‘ரொட்டி இல்லையா? கேக் சாப்பிடுங்கள்!’ ‘ஊசியில் ஓட்டை என்று சல்லடை கேலி பேசுவதா?’

தென்றல் அல்ல நாங்கள்; புயல் என அறிவீர்! சாதிய, சதிகார அரசியலுக்கு சம்மட்டி அடி தாரீர்!” என நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளின் ஒவ்வொரு தலைப்புமே நம்மை சுண்டி இழுக்கின்றன; படிக்கத் தூண்டுகின்றன!

திருவாரூர் புலிவலத்தில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தின் சிறப்பில் தொடங்கி, துணை முதல்வரின் தி.மு.க. சின்னம் தொடர்பாக, அரசு விழாவில் காவி உடையில் வலம் வரும் உ.பி. முதல்வர்; அ.தி.மு.க. கரைவேட்டியுடன் கலந்து கொண்ட எம்.ஜி.ஆர்., எடப்பாடி பழனிச்சாமி ஆகியோர்களை அம்பலப்படுத்தும் சிலந்தியின் பதில் என நூலின் ஒவ்வொரு பக்கமும் கருத்து வளம் நிரம்பியவை.

நூல் வெளிவர துணை நின்றோர் அனைவரையும் ‘சங்கொலி’ பாராட்டி வாழ்த்துகிறது! வரலாற்று ஆவணமாய்த் திகழும் சிலந்தி கட்டுரைகளை தமிழ் மக்கள் வாங்கிப் படித்து பரப்பிட முன்வர வேண்டும் என்று ‘சங்கொலி’ விழைகிறது!

ஆ.வந்தியத்தேவன்

–நன்றி ‘சங்கொலி’

9.5.2025

இன்று பரணிபுத்தூரில் நடைபெறுகிறது!

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம்!

மாவட்ட செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!

காஞ்சிபுரம், மே 11 -

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று 11ஆம் தேதி மாலை பரணிபுத்தூரில் நடைபெற உள்ளது என்று மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று 11.5.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணியளவில், குன்றத்தூர் வடக்கு ஒன்றியம், பரணிபுத்தூர் மாங்காடு சாலையில் அமைந்துள்ள ஸ்ரீ கிருஷ்ணவேணி மகால் திருமண மண்டபத்தில், மாவட்ட கழக அவைத் தலைவர் த.துரைசாமி அவர்கள் தலைமையிலும், மாவட்ட கழக துணைச் செயலாளர்கள், இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி, மற்றும் மாவட்ட கழக பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

கழக நாடாளுமன்ற சட்டமன்ற இந்நாள் - முன்னாள் உறுப்பினர்கள், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள், தலைமைச் செயற்குழு பொதுக் குழு உறுப்பினர்கள், மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்டக் கழகப் பிரதிநிதிகள்,மாநகர வட்ட கழக செயலாளர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் மாவட்ட பகுதி ஒன்றிய நகர பேரூர் கழக அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்துக்கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இக்கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழா கொண்டாவது குறித்தும், மாவட்ட செயலாளர் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்தும் மற்றும் சட்டமன்றத் தொகுதி வாரியாக வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2) மற்றும் தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் (BLC) ஆலோசனைக் கூட்டம் நடத்துவது சம்பந்தமாகவும்,

ஒன்றிய - நகர - பகுதி - பேரூர்களில் வாக்குச்சாவடி வாரியாக வாக்குச்சாவடி நிலைமுகவர்கள் (BLA2) மற்றும் தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் (BLC) ஆலோசனைக் கூட்டம் நடத்துவது சம்பந்தமாகவும், கழக ஆக்கப்பணிகள் குறித்தும் விவாதிக்கப்பட உள்ளது.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிக்கையில் கூறியுள்ளார்.

மக்களுக்கு உயர் மருத்துவ சேவைகள் மற்றும் ஆரோக்கியமான வாழ்வினை உறுதி செய்யும் வகையில், சட்டமன்ற மானியக் கோரிக்கை 2025-26ஆம் ஆண்டு அறிவிப்பின்கீழ், 1256 இடங்களில் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என்கின்ற அறிவிப்பினைத் தொடர்ந்து, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (10.05.2025) சைதாப்பேட்டை மாந்தோப்பு. சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் முன்னோட்டமாக நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமினை ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார்,. தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண்தம்புராஜ், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (சுகாதாரம்) டாக்டர். கோ.சாந்தகுமாரி, மாநகர நல அலுவலர் மரு.ஜெகதீசன், மண்டலக்குழுத்தலைவர் கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள் ப.சுப்பிரமணி, தா.மோகன்குமார், திருமதி.ஸ்டெல்லா ஜாஸ்மீன் ரத்னா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.